# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

**ந.க.எண் 1696/2020/இ2 நாள் 23.12.2020**

**பசலி - 1430 உரிமம் இனங்கள் - மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**(இரண்டாம் அழைப்பு)**

இத்திருக்கோயிலில் கீழ்காணும் விபரப்படியான உரிமம் இனங்களை அதன் எதிரே குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் அனுபவித்துக் கொள்வதற்கான உரிமம் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி எதிர்வரும் 29.12.2020 அன்று இத்திருக்கோயில் கோவிந்தம்மாள் ஆதித்தனார் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெறும்.

பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள விரும்புவோர் முன் வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையை ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக 24.12.2020 க்கு பிறகு பெறப்பட்ட கேட்பு வரைவோலை (Demand Draft) அல்லது வங்கியாளர் காசோலை (Bankers Cheque) -ஐ திருச்செந்தூர் வங்கி கிளையில் மாற்றத்தக்க வகையில் "இணை ஆணையர்/செயல் அலுவலர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்" என்ற பெயரில் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி, கேட்பு வரைவோலை (Demand Draft) அல்லது வங்கியாளர் காசோலை (Bankers Cheque)-ன் நகலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து கொடுக்க வேண்டும். மேற்படி முன் வைப்புத்தொகை மற்றும் காப்புத் தொகையை செலுத்தியதின் நகலுடன் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் பொது ஏலத்திலும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. எக்காரணத்தைக் கொண்டும் முன்வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகை ரொக்கமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| 1. ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும் தேதி மற்றும் நேரம் | 24.12.2020 முற்பகல்10.00 மணி முதல்<br>27.12.2020 பிற்பகல் 2.00 மணி வரை |
| 2. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் தேதி மற்றும் நேரம் | 28.12.2020 முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 05.00 மணிவரை |
| 3. பொது ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் | 29.12.2020 முற்பகல் 11.30 மணி முதல் |
| 4. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி மற்றும் நேரம் | 29.12.2020 அன்று ஒவ்வொரு இனத்தின் ஏலக் கேள்வி முடிந்த பிறகு |
| 5. பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடைபெறும் இடம். | கோவிந்தம்மாள் ஆதித்தனார் மண்டபம் - திருக்கோயில் வளாகம். |
| 6. ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை. | வரிசை 1 மற்றும் 2ல் உள்ளஇனங்களுக்கு ரூ.250/-. |

| வ. எண் | உரிம இனம் | உரிம காலம் | ஏலம் ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை ரூ. | காப்புத் தொகை ரூ. | மின் தண்ணீர் கட்டணம் காப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | திருக்கோயில் வளாகம் மின் நிலையம் செல்லும் வழியில் 10’×10’ அளவில் கடை எண் C3,C5 முதல் C12 வரை - 9 கடைகள் (ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியாக ஏலம் கேட்க வேண்டும்) | ஏலத்தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு 30.06.2023 முடிய | 1,00,000 | 25,000 | 5,000 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | அருள்மிகு வெயிலுகந்தம்மன் கோயில் வணிக வளாக கடை எண்:1, 2, 4, 5, 8 மாத வாடகைக்கு எடுத்துக்கொள்ளும் உரிமம் (ஒவ்வொரு கடைக்கும் - 5 கடைகள் தனித்தனியாக ஏலம் கேட்க வேண்டும்) | ஏலத்தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு 30.06.2023 முடிய | 20,000 | 5,000 | 5,000 |
| 3 | மேலக்கோபுர திருப்பணிக்குரிய திருச்செந்தூர் நாடார் தெரு காலிமனையை வாடகைக்கு எடுத்துக்கொள்ளும் உரிமம் | ஏலத்தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு 30.06.2023 முடிய | 1,000 | - | - |
| 4 | இத்திருக்கோயிலுடன் இணைந்த மேலக்கோயிலுக்கு சொந்தமான பந்தல் மண்டபத்தில், சரவணய்யர் பள்ளிக்கு எதிரில் 6’×6’ சதுரடி அளவிலான காலி இடத்தில் தையல் இயந்திரம் மட்டும் வைத்து தொழில் நடத்தும் உரிமம். | ஏலத்தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு 30.06.2023 முடிய | 1,000 | - | - |
| 5 | சபாபதிபுரம் தெரு கதவு எண் 5,6 வீடுகளின் பின்புறமுள்ள, சர்வே எண் 1503/56 ல் உள்ள இடத்தில் நிற்கும் இரண்டு தென்னை மரங்களின் மேல் மகசூல் உரிமம். | ஏலத்தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு 30.06.2023 முடிய | 500 | 500 | - |
| 6 | அருள்மிகு வெயிலுகந்தம்மன் திருக்கோயிலில் சர்வே எண் 303 ல் அமைந்துள்ள 30 தென்னை மரங்களின் மேல் மகசூல் உரிமம். | ஏலத்தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு 30.06.2023 முடிய | 5000 | 1000 | - |

**இரா. கண்ணன் ஆதித்தன்., M.S.(USA)**
**தக்கார்**

**சி.கல்யாணி, எம்.எல்.,**
**இணை ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ)**

## தனி நிபந்தனைகள்

## 1 முதல் 4 முடிய கடைகள் மற்றும் காலிமனை வாடகைக்கு எடுத்துக்கொள்ளும் உரிமம்

1. ஒவ்வொரு கடையினையும், தனித்தனியாக மாதாந்திர உரிமக்கட்டண அடிப்படையில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கேட்க வேண்டும்.
2. உரிம காலம் ஏல தேதி முதல் மூன்று ஆண்டுகள் முடிய மட்டும் அமுலில் இருக்கும்.
3. 1430-ம் பசலிக்கு ஏலம் கேட்க வேண்டும். 1430-ம் பசலி ஏலத்தொகையில் 15% சேர்த்து 1431-ம் பசலிக்கும், ஏல தேதி முடிந்த ஓராண்டு தேதியிலும் 1431-ம் பசலி தொகையுடன் 15% சேர்த்து 2வது ஆண்டு தேதியிலும் 1432-ம் பசலிக்கும் உரிமக்கட்டணத் தொகை செலுத்த வேண்டும். ஒவ்வொரு பசலிக்கும் பசலி தொடங்கிய ஒரு மாதத்திற்குள் முழுத் தொகையும் செலுத்தப்படவேண்டும். தவறினால் உரிமம் இரத்து செய்யப்பட்டு திருக்கோயில் இடம் சுவாதீனம் மீட்கப்பட்டு மறு பொது ஏலம் நடத்தப்படும்.
4. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டவுடன் மேற்படி கடைக்குரிய 1430-ம் பசலி மற்றும் 1432-ம் பசலிக்குரிய உரிமத்தொகையை வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். தவறினால் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உடனடியாக ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விடப்படும்.
5. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி காப்புத்தொகையை பசலி முடிவில் கட்டிடத்தை நல்ல முறையில் ஒப்படைத்துவிட்டு திரும்ப பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விளம்பர பொது நிபந்தனைகளின்படியும் செயல்பட வேண்டும்.
6. காலிமனையில் கட்டுமானப்பணிகள் எதுவும் மேற்கொள்ளக்கூடாது.
7. காலிமனையை திருக்கோயிலிலிருந்து பெறும் நிலையிலேயே திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
8. காலிமனைக்கு பேரூராட்சி மன்றத்திற்கு தீர்வை, வரிகள் முதலான ஏதும் உரிமம் பெற்றவர்கள் தன் பெயரில் செலுத்தக்கூடாது மற்றும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விளம்பர பொது நிபந்தனைகளின்படியும் செயல்பட வேண்டும்.
9. கடை மற்றும் காலிமனைகளை வேறு நபர்களுக்கு உள் குத்தகைக்கு விடுதல் கூடாது.
10. வணிக நோக்கில் கடை நடத்துபவர்கள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்களை பயன்படுத்தக்கூடாது.

## 5 மற்றும் 6 முடிய மரங்கள் மேல் மகசூல் எடுத்துக்கொள்ளும் உரிமம்

1. தென்னை மற்றும் பனை மரங்களின் பாளையிலிருந்து எக்காரணம் கொண்டும் கள் இறக்க கூடாது.
2. உரிம காலம் ஏல தேதி முதல் மூன்று ஆண்டுகள் முடிய மட்டும் அமுலில் இருக்கும்.
3. 1430-ம் பசலிக்கு ஏலம் கேட்க வேண்டும். 1430-ம் பசலி ஏலத்தொகையில் 15% சேர்த்து ஏல தேதி முடிந்த ஓராண்டு தேதியில் 1431-ம் பசலிக்கும், 1431-ம் பசலி தொகையுடன் 15% சேர்த்து 2வது ஆண்டு தேதியில் 1432-ம் பசலிக்கும் உரிமக்கட்டணத் தொகை செலுத்த வேண்டும். ஒவ்வொரு பசலிக்கும் பசலி தொடங்கிய ஒரு மாதத்திற்குள் முழுத் தொகையும் செலுத்தப்படவேண்டும். தவறினால் உரிமம் இரத்து செய்யப்பட்டு திருக்கோயில் இடம் சுவாதீனம் மீட்கப்பட்டு மறு பொது ஏலம் நடத்தப்படும்.
4. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டவுடன் மேற்படி கடைக்குரிய 1430-ம் பசலி மற்றும் 1432-ம் பசலிக்குரிய உரிமத்தொகையை வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். தவறினால் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி உடனடியாக ரத்து செய்யப்பட்டு மறு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி விடப்படும்.

**இரா. கண்ணன் ஆதித்தன்., M.S.(USA)**
**தக்கார்**

**சி.கல்யாணி, எம்.எல்.,**
**இணை ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ)**

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

## பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி

## பொது நிபந்தனைகள்

1. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதிகளின்படி நடத்தப்படும். இந்த விதிகளின் படி பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி அறநிலையத்துறை ஆணையர் அங்கீகாரம் மற்றும் ரத்து அதிகாரத்திற்குட்பட்டது.

2. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களில் கலந்து கொள்ள விரும்பினால் அறிவிப்பில் கண்டுள்ளபடி காப்புத் தொகை மற்றும் ஏல வைப்புத் தொகை தனித்தனியாக செலுத்தி கலந்து கொள்ள வேண்டும். காப்பத் தொகை செலுத்தாதவர்கள் கண்டிப்பாக பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஏலம் ஜாரியாகாதவர்கள் டெபாசிட் தொகை மற்றும் காப்புத் தொகை ஏலம் முடிந்த பின்னர் திரும்ப பெற்றுக்கொள்ளலாம்.

3. ஒவ்வொரு இனம் பொது ஏலத்தின் போதும் அந்த ஏலத்தின் முன் வைப்புத் தொகை செலுத்தியவர்கள் மட்டுமே ஏலம் நடக்கும் இடத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

4. ஏலம் உயர்ந்த கேள்வியுடன் நிறுத்திக் கொண்டு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும். ஏலம், ஒப்பந்தப்புள்ளி இவை இரண்டில் எது கூடுதல் தொகையோ அதுவே உறுதி செய்யப்படும்.

5. உரிமக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக காரணம் எதுவும் சொல்லாமல் நிபந்தனைகளை கூட்டவும், குறைக்கவும் அல்லது மாறுதல் செய்யவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமையுண்டு.

6. காரணம் கூறாமல் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையை நிறுத்தி வைக்கவோ அல்லது ஒத்தி வைக்கவோ இணை ஆணையர்/நிர்வாக அதிகாரி அதிகாரம் படைத்தவர். பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்த பின் உயர்ந்த தொகைக்கு கேட்பவருடைய ரொக்க வைப்புத் தொகை காப்புத்தொகையாக வைத்துக் கொள்ளப்படும். உரிமம் உறுதி பெற்றவர்கள் பதிவேட்டில் தன் முழு விலாசத்தையும் எழுதி கையெழுத்து செய்ய வேண்டும். உறுதி செய்யப்பட்ட ஏலதாரர்/ ஒப்பந்தப்புள்ளி தாரர் செலுத்தியிருக்கும் காப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் கிடையாது.

7. உரிமம் உறுதி பெற்ற நபர் வைப்புத் தொகை உட்பட மின் காப்புத் தொகையினை உடன் செலுத்த வேண்டும்.

8. ஏலம் உறுதி பெற்ற ஏலதாரர் திருக்கோயிலால் வழங்கப்பட்டுள்ள உரிம ஒப்பந்த மாதிரிப்படி உரிய முத்தரை காகிதத்தில் ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். ஒப்பந்தபத்திரம் ஏற்படுத்தாமல் சம்மந்தப்பட்டவர்கள் உரிமச்சொத்தினை அனுபவிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. ஒப்பந்தபத்திரத்திற்கான செலவை உரிமதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

9. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள வந்தவர்கள் நியாயமான தொகைக்கு ஏலம் கேட்கவில்லை என்று திருக்கோயில் நிர்வாகம் கருதினால் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க திருக்கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதனை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

10. உரிமம் உறுதி பெற்றவர்கள் எக்காரணத்தை கொண்டும் அவ்வுரிமையை கை மாற்றம் (டிரான்ஸ்பர்) செய்யவோ, அல்லது பினாமியாக நடத்தவோ உரிமை கிடையாது. மேலும் தன் விருப்பப்படி உரிமத்திலிருந்து விடுபடவும் உரிமை இல்லை.

11. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் முழு விபரங்களும், நிபந்தனைகளும் தெரிந்தே கலந்து கொண்டதாக கருதப்படுவார்கள். நடவடிக்கை முடிவு செய்த பின் கூறும் எவ்வித ஆலோசனைகளும் ஆட்சேபனைகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

12. குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே உரிமம் விடப்படுவதால் உரிம காலம் முடிவடைந்த உடன் தன்னியல்பாகவே சொத்தின் சுவாதீனம் திருக்கோயிலை வந்தடையும் மேலும், உரிமக்காலம் முடிவடைந்த பின்னர் உரிமதாரருக்கு எந்த வித பின்தொடர்ச்சி பாத்தியதையும் கிடையாது.

13. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் தொற்று நோய் இல்லாதவராக இருக்க வேண்டும்.

14. பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் இந்து சமயத்தவராக இருக்க வேண்டும்.

15. திருக்கோயில் நலனுக்கு எதிராக செயல்பட்டவர்களும், செயல்பட்டதாக கருதப்படுபவர்களும், முன் பாக்கி வைத்திருப்பவர்களும், திருக்கோயில் பாக்கிக்காக தீர்ப்பு கடனாளி என்று அறிவிக்கப்பட்டவர்களும், பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

16. உரிமம் பெற்றவர்களுக்கு இராஜீயம் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஆகியவற்றால் ஏற்படும் இழப்புகளுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பு ஏற்க இயலாது.

17. பினாமி பெயரில் உரிமம் கேட்பதாக தெரிந்தாலோ, முன்பாக்கி உள்ளவர்கள் உறவினர் பெயரால் உரிமம் கேட்க முன்வந்தாலோ, நபர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். பொது/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவு செய்தபின் முன்பாக்கி உள்ளவர்கள் கலந்து

கொண்டதாக தெரியவந்தால் உரிமம் ரத்து செய்யப்படும்.

18. உரிமதாரர் உரிம காலத்தில் நிபந்தனைகளை செயல்படுத்த முடியாது போனால் மேற்படியார் வாரிசுகளோ அல்லது நிர்வாகிகளோ நிபந்தனைகளை நிறைவேற்ற கடமைபட்டவராவார்.

19. உரிமதாரர் தானாக முன்வந்து உரிமத்தினை ஒப்படைப்பு செய்ய நேர்ந்தால் முன் வைப்புத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது. மேலும் மறு ஏலம் விட நடவடிக்கை விட நடவடிக்கை எடுக்கப்படும். மறு ஏலத்திற்கான செலவு மற்றும் ஏற்படும் நஷ்டத்திற்கு உரிமதாரரே பொறுப்பாவார்.

20. ஏலம்/ஒப்பந்தப்புள்ளியின் போது சமர்ப்பிக்கப்படும் வங்கி வரைவோலைகள். வங்கி காசோலைகள், போன்றவவைகளை திருக்கோயிலுக்கு காசாக்குவதில் வங்கி கழிவு ஏதுவம் ஏற்பட்டால் மேற்படி வங்கிக் கழிவுக்கு ஏலம் உறுதி பெற்றவரே பொறுப்பாவார்.

21. ஏல வைப்புத் தொகை தொகை செலுத்தாதவர்கள் இத்திருக்கோயிலுக்கு எந்த வகையிலும் பாக்கி வைத்திருப்பவர்கள், பாக்கியுள்ளவர்களுக்காக வேறு நபர்கள் பெயரால் அல்லது அவரது உறவினர் பெயரால் (தாய் தந்தை மனைவி மக்கள், சகோதரர்கள் மற்றும் பந்துக்கள்) கலந்து கொள்பவர்கள் கோயில் நன்மைக்கு புறம்பான செயல்களில் ஈடுபடுபவர்கள், கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், வழக்கு தொடரப்பட்டவர்கள், 18 வயது பூர்த்தியாகாதவர்கள், ஆகியவர்களை ஒப்பந்தப்புள்ளி/ ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஏல நடவடிக்கைகள் முடிவு செய்த பின் மேற்படி நபர்கள் கலந்து கொண்டதாக தெரியவந்தால் உரிமம் ரத்து செய்யப்படும்.

22. திருக்கோயில் அபிவிருத்தியை கருதி கட்டிடங்களில் மாறுதல் அபிவிருத்தி பணிகள் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால்உரிமம் காலத்தை ரத்து செய்து கட்டிடத்தை திரும்ப எடுத்துக் கொள்ள திருக்கோயிலுக்கு அதிகாரம் உண்டு. இதில் உரிமதாரர் ஏதும் நஷ்டஈடு கோர உரிமை இல்லை.

23. உரிமதாரர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திருக்கோயில் கட்டிடங்களுக்கு திருக்கோயில் அனுமதியின்றி எவ்வித மாற்றங்களோ, அல்லது மராமத்து வேலைகளோ செய்யக்கூடாது.

24. உரிமதாரர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள பொருட்களுக்கு தீ விபத்து மற்றும் இதர இயற்கை பாதிப்பிலிருந்து தமது சொந்த பொறுப்பிலேயே காப்பீடு செய்திருக்க வேண்டும். அப்படி காப்பீடு செய்யாத பட்சத்தில் திருக்கோயிலிலிருந்து எவ்வித நஷ்டஈடும் கோரக்கூடாது. வழங்கப்படமாட்டாது. கடைகள் மற்றும் இதர கட்டிடங்களில் எளிதில் தீப்பற்றக்கூடிய கூரைகள் அமைத்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும். ரத்து செய்யப்பட்டு மீண்டும் அந்த இனம் பொது ஏலத்தில் விடப்படும். அதில் திருக்கோயிலுக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் அதற்கு முன் ஏலதாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.மேலும், உரிம காலத்தில் வணிகம் மேற்கொள்ளும் நபர்கள் ஒவ்வொரு பசலிக்கும் உரிய தொழில் வரி செலுத்திய சான்றினை திருக்கோயில் அலுவலகத்தில் தவறாது சமர்ப்பிக்க வேண்டும்.

25. உரிமதாரர்கள் மேற்படி நிபந்தனைகட்கும், இத்திருக்கோயிலில் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் நிபந்தனைகட்கும் கட்டுப்பட்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும்.

26. உரிமம் வழங்கப்படும் கடைகளில் தடை செய்யப்பட்ட பொருள்கள் எவையும் வணிகம் செய்யக்கூடாது

27. இதர நிபந்தனைகள் ஏதும் இருந்தால் அதை ஏலத்தின் போது அறிவிக்கப்படும்.

**இரா. கண்ணன் ஆதித்தன்., M.S.(USA)**
**தக்கார்**

**சி.கல்யாணி, எம்.எல்.,**
**இணை ஆணையர்/செயல் அலுவலர் (கூ.பொ)**

# அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்

**ந.க.எண். 1575/2020/இ2-1 நாள் 23.12.2020**

**பசலி - 1430-பலவகை - உரிமம் இனங்கள் - மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (மூன்றாம் அழைப்பு)**

இத்திருக்கோயிலில் கீழ்காணும் விபரப்படியான உரிமம் இனங்களை அதன் எதிரே குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் அனுபவித்துக் கொள்வதற்கான உரிமம் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி எதிர்வரும் 29.12.2020 அன்று இத்திருக்கோயில் வளாகத்தில் உள்ள கோவிந்தம்மாள் ஆதித்தனார் திருமண மண்டபத்தில் வைத்து காலை 10.00 மணியளவில் நடைபெறும்.

பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள விரும்புவோர் முன் வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையை ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியாக 24.12.2020 க்கு பிறகு பெறப்பட்ட கேட்பு வரைவோலை (Demand Draft) அல்லது வங்கியர் காசோலை (Bankers Cheque) -ஐ திருச்செந்தூர் வங்கி கிளையில் மாற்றத்தக்க வகையில் "இணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்" என்ற பெயரில் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி, கேட்பு வரைவோலை (Demand Draft) அல்லது வங்கியர் காசோலை (Bankers Cheque)-ன் நகலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து கொடுக்க வேண்டும். மேற்படி முன் வைப்புத்தொகை மற்றும் காப்புத் தொகையை செலுத்தியதின் நகலுடன் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்பவர்கள் பொது ஏலத்திலும் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது. எக்காரணத்தைக் கொண்டும் முன்வைப்புத்தொகை மற்றும் காப்புத்தொகை ரொக்கமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| 1. ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும் தேதி மற்றும் நேரம் | 24.12.2020 முற்பகல்10.00 மணி முதல்<br>27.12.2020 பிற்பகல் 02-00 மணி வரை |
| 2. பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் தேதி மற்றும் நேரம் | 28.12.2020 முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 05.00 மணிவரை |
| 3. பொது ஏலம் நடைபெறும் தேதி மற்றும் நேரம் | 29.12.2020 முற்பகல் 10.00 மணி முதல் |
| 4. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி மற்றும் நேரம் | 29.12.2020 அன்று ஒவ்வொரு இனத்தின் ஏலக் கேள்வி முடிந்த பிறகு |
| 5. பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி திறப்பு நடைபெறும் இடம். | கோவிந்தம்மாள் ஆதித்தனார் மண்டபம் - திருக்கோயில் வளாகம். |
| 6. ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை. | 1. வரிசை எண் 1 முதல் 6 முடிய உள்ள இனங்களுக்கு ரூ 500/-.<br>2. வரிசை 7 முதல் 10 முடிய உள்ள இனங்களுக்கு ரூ 250/-. |

**உரிம இனங்கள் விவரம்**

| வ.எண் | உரிம இனம் | உரிம காலம் | ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி முன் வைப்பு தொகை | காப்புத் தொகை | மின்/ தண்ணீர் கட்டணம் காப்புத் தொகை. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | திருக்கோயில் நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்து தரப்படும் இரண்டு இடங்களில் தேங்காய் பழக்கடை நடத்தும் உரிமம். | SOP படி அனுமதிக்கப்படும் நாள் முதல் 30.06.2021 முடிய | 1,00,00,000/- | 6,00,000/- | 25,000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | திருக்கோயில் நிர்வாகம் ஒதுக்கீடு செய்யும் இடத்தில் 10×10 இட அளவுக்குள் குளிர் பானக்கடை எண் II நடத்தும் உரிமம். | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | 10,00,000/- | 1,00,000/- | 5,000/- |
| 3. | முடிகாணிக்கை மண்டபத்தின் கிழக்கு புறம் உள்ள காலியிடத்தில் சோடா, கலர், மற்றும் குளிர்பானம் விற்பனை செய்யும் உரிமம் மற்றும் ஆவணி, மாசி 10-ம் திருநாள் தேரோட்டத்தின் போது பக்தர்கள் செலுத்தும் எலுமிச்சம்பழ மாலைகளை சேகரித்துக்கொள்ளும் உரிமம் | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | 15,00,000/- | 1,00,000/- | 5,000/- |
| 4. | திருக்கோயில் நிர்வாகத்தால் அடையாளம் காட்டப்படும் இடத்தில் வெற்றிலை பாக்கு கடை நடத்தும் உரிமம் | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | 15,00,000/- | 1,00,000/- | 5,000/- |
| 5. | அருள்மிகு தூண்டுகை விநாயகர் கோயில் மற்றும் வைகாசி விசாகம் மைல் கல் விடலைத் தேங்காய் சேகரித்துக் கொள்ளும் உரிமம் | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | 10,00,000/- | 1,00,000/- | -- |
| 6. | திருக்கோயில் நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் இடத்தில் எடை காட்டும் கருவி வைத்து கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | 2,00,000/- | 10,000/- | 5,000/- |
| 7. | திருக்கோயில் நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்து தரப்படும் நான்கு இடங்களில் மட்டும் இளநீர் விற்பனை செய்யும் உரிமம் | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | | | |
| | அ) நாழிக்கிணறு பேருந்து நிலையம் அருகில் | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | 25,000/- | -- | -- |
| | ஆ) ஜெயந்திநாதர் விடுதி அருகில் | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | 25,000/- | -- | -- |
| | இ) வேலவன் விடுதி செல்லும் வழி அருகில் | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | 25,000/- | -- | -- |
| | ஈ) நாழிகிணறு நடைபாதை அருகில் | ஏலத்தேதி முதல் 30.06.2021 முடிய | 25,000/- | -- | -- |

இரா. கண்ணன் ஆதித்தன்., M.S.(USA) — தக்கார்

சி.கல்யாணி, எம்.எல்., — இணை ஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)

## அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

## மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி உரிமம் - தனி இனம் நிபந்தனைகள்

### 1. தேங்காய் பழம் விற்பனை செய்யும் உரிமம்

1. திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அர்ச்சனை முதலான வழிபாடுகளுக்குரிய தேங்காய் -1, வாழைப்பழம் -2, பத்தி -2, வெற்றிலை -2, வெட்டுப்பாக்கு -1, துணிப்பை முதலான பொருட்களை ரூ.50/- (ரூபாய் ஐம்பது) என்ற விலையில் தரமுள்ளதாக விற்பனை செய்ய வேண்டும். **(கண்டிப்பாக மேற்படி நிர்ணயித்த விலைக்கு மேல் விற்கக்கூடாது)** பூஜைப்பொருட்கள் தொகுப்பாக சேர்த்து பக்தர்களை வாங்க வைத்திட கட்டாயப்படுத்தக் கூடாது. அரசு நிலையான வழிகாட்டுதல்படி தேங்காய் பழ விற்பனை அனுமதிக்கப்படும் நாள் முதல் 30.06.2021 வரையிலான காலத்திற்கான உரிமம்.
2. விற்பனை செய்யப்படும் பூஜைப்பொருட்களின் விலைப்பட்டியல் பக்தர்கள் பார்வையில் தெளிவாக தெரியும்படி தமது சொந்த பொறுப்பில் எழுதி வைக்க வேண்டும். தவறினால் திருக்கோயில் சார்பில் விலைப்பட்டியல் செய்து வைத்து அதற்கான தொகை நஷ்ட ஈடு வசூல் செய்யப்படும்.
3. திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் குறிப்பிட்ட அளவுள்ள இடத்தில் மட்டும் தேங்காய், பழம் உள்ளிட்ட அர்ச்சனை பொருட்களை விற்பனை செய்ய வேண்டும். இதர பொருட்களை விற்பனை செய்யக்கூடாது.
4. திருக்கோயிலில் கிரிபிரகாரம் கட்டுமானப்பணி நடைபெற இருப்பதால் கட்டிடப்பணிக்கு இடையூறு ஏற்படா வண்ணம் சூழ்நிலைக்கு ஏற்ப திருக்கோயில் நிர்வாகத்தால் குறிப்பிடப்படும் இடங்களில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் விற்பனை நிலையம் தமது சொந்த பொறுப்பில் அமைத்துக்கொள்ள வேண்டும்.
5. வருகின்ற பக்தர்களிடம் இனிமையாக, கனிவு மற்றும் அன்புடன் நடந்து கொள்ளவேண்டும்.
6. கடையில் பொருட்கள் விற்பனைக்கு நியமிக்கப்படும் தொழிலாளர்கள் இந்துக்களாக இருக்க வேண்டும்.
7. விற்பனை செய்யக்கூடிய பூஜைப்பொருட்கள் தரமுள்ளதாக இல்லையென்றோ, அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவோ, புகார் வரப்பெற்றாலோ, திருக்கோயில் புனிதத்தன்மை பாதிக்கும்படி விற்பனை செய்வதாகவோ புகார் வரப்பெற்றால் ஏலத்தை இரத்து செய்து மறு ஏலத்திற்கு கொண்டு வர இணை ஆணையர்/நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு.
8. ஏலம் உறுதி பெற்றவர் திருக்கோயிலால் வழங்கப்பட்ட இடத்திற்கு வாடகையை உடனடியாக செலுத்திட வேண்டும்.
9. இதர இனங்களையோ, பிற உரிம இனங்களையோ, வைத்து விற்பனை ஏதும் செய்யக்கூடாது. மேலும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் காணும் பொது நிபந்தனைகளின்படி செயல்படவேண்டும்.

### 2. குளிர்பானங்களை வைத்து விற்பனை செய்யும் உரிமம் மற்றும் ஆவணி மாசி 10-ம் திருநாள் தேரோட்டத்தில் எலுமிச்சை பழ மாலை சேகரிக்கும் உரிமம் கடைஎண்.1

### மற்றும்

### 3. குளிர்பானம் விற்பனை செய்யும் கடை எண்.2

1. திருக்கோயிலிலிருந்து ஒதுக்கப்பட்ட இடத்திற்குள் வைத்து சோடா, கலர் முதலிய குளிர்பானங்களை மட்டும் விற்பனை செய்ய வேண்டும்.
2. இதர இனங்களையோ, பிற உரிம இனங்களையோ, வைத்து விற்பனை ஏதும் செய்யக்கூடாது.
3. போதை தரும் பானங்கள் எதையும் விற்பனை செய்யக்கூடாது.
4. உரிய மின் கட்டணத்தையும், தண்ணீர் கட்டணத்தையும், குறித்த காலத்தில் செலுத்த வேண்டும். பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி விளம்பர பொது நிபந்தனைகளின்படியும் செயல்படவேண்டும்.
5. விற்பனைப் பொருட்களின் விலைப்பட்டியல் அறிவிப்பு பலகையில் வைக்க வேண்டும்.
6. தேரின் தட்டின் முகப்பிலிருந்து கொண்டு பக்தர்களால் வழங்கப்படும் எலுமிச்சம்பழ மாலைகளை மட்டும் சேகரித்துக்கொள்ள வேண்டும்.
7. தேரின் உட்பகுதிக்கோ, சுவாமி அலங்காரம் மற்றும் பட்டர்கள் கைங்கர்யங்களுக்கோ, இடையூறு செய்யக்கூடாது.
8. தேருக்கோ, தேரில் உள்ள பொம்மைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படாமல் இருக்க வேண்டும். மற்றும் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி விளம்பர பொது நிபந்தனைகளின்படியும், செயல்படவேண்டும்.

## 4. வெற்றிலைபாக்கு நடத்தும் உரிமம்

1. வெற்றிலை பாக்கு கடைக்கு அனுமதிக்கப்பட்ட பொருட்களான வெற்றிலை, பாக்கு, பற்பசை, சோப்பு, சீப்பு, பவுடர்,பிஸ்கட், கடலை மிட்டாய், சாக்லேட் போன்ற பொருட்களை மட்டும் விற்பனை செய்ய வேண்டும்.
2. விற்பனை உரிமம் பெற்றவர் லாகிரி வஸ்துக்கள் புகையிலை பொருட்கள், பீடி, சிகெரட், போன்ற போதை தரும் பொருட்கள், மதுபானம், போன்றவைகளை விற்பனை செய்யக்கூடாது.
3. இதர இனங்களையோ, பிற உரிம இனங்களையோ, வைத்து விற்பனை ஏதும் செய்யக்கூடாது. மீறினால் பறிமுதல் செய்யப்படும்
4. வருகின்ற பக்தர்களிடம் இனிமையாக பேசியும், அன்புடனும நடந்துகொள்ள வேண்டும். பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி விளம்பர பொது நிபந்தனைகளின்படியும் செயல்படவேண்டும்.
5. திருக்கோயில் நிர்வாகத்தால் குறிப்பிட்ட 10′ X 10′ சதுர அடி அளவில் ஒதுக்கீடு செய்யும் இடத்தில் தனது சொந்த செலவில் வெற்றிலைப்பாக்கு கடை அமைத்து கொள்ள வேண்டும். வழங்கப்பட்ட இடத்திற்கும் மேல் கடை அளவுகள் நீட்டிப்பு செய்தால் உரிமதாரர் சொந்த செலவில் அகற்றப்படும்.

## 5. தூண்டுகை விநாயகர் கோயில் விடலைத்தேங்காய் மற்றும் வைகாசி விசாகம், மைல் கல் விடலைத்தேங்காய் சேகரித்துக்கொள்ளும் உரிமம்

1. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தூண்டுகைவிநாயகர் கோயிலில் செலுத்தும் விடலைத்தேங்காய்களை உடனுக்குடன் தமது சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்த வேண்டும்.
2. வைகாசி விசாகத் திருநாளில் வரும் பக்தர்கள் மைல்கல்லில் செலுத்தும் விடலைத்தேங்காய்களை மட்டும் உடனுக்குடன் தமது சொந்த பொறுப்பில் அப்புறப்படுத்திக்கொள்ள வேண்டும்.
3. தேங்காயில் உள்ள சிரட்டைகள், தேங்காய் சில்லுகள் முதலானவற்றால் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. விடலைத்தேங்காய் நீர் கோயில் முகப்பில் தேங்கி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
5. அவ்வப்போது தேங்காய்களை அப்புறப்படுத்தி அப்பகுதியை கழுவி சுத்தமாக இருக்கும் வண்ணம் தூய்மையாக பராமரித்துக்கொள்ள வேண்டும்.
6. அவ்வப்போது சுற்றுப்புறங்களில் பக்தர்களால் போடப்படும் தேங்காய் குடுமி நார் முதலானவற்றையும், அப்புறப்படுத்தியும், துப்புறவு செய்தும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.
7. தேவையற்ற பொருட்களை வைத்து புனிதத்தையும், அழகையும் கெடுக்கக்கூடாது. மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏல அறிவிப்பில் காணும் பொது நிபந்தனைகளின்படியும், செயல்படவேண்டும்.

## 6. எடைகாட்டும் கருவி மூலம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

1. உரிமம் பெற்றவர் திருக்கோயில் நிர்வாகம் குறிப்பிடும் இடத்தில் மட்டுமே எடை காட்டும் இயந்திரம் வைத்து நபர் ஒன்றுக்கு ரூ.1/- மட்டும் (ரூபாய் ஒன்று மட்டும்) கட்டணம் வசூலிக்க வேண்டும். நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக வசூல் செய்தால் உரிமம் இரத்து செய்யப்படும்.

2. இந்த உரிமம் பெற்றவருக்கு 3' X 3' இட அளவில் எடை பார்க்கும் இயந்திரம் வைத்துக்கொள்ள மட்டுமே அனுமதிக்கப்படும். மேற்கூரை அல்லது பக்க அடைப்பு செய்யக்கூடாது.

3. திருக்கோயில் நிர்வாகத்தால் குறிப்பிடப்படும் இடத்தில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் எடைகாட்டும் கருவியினை தமது சொந்த பொறுப்பில் அமைத்துக்கொள்ள வேண்டும். கட்டண விபரத்திற்கான அறிவிப்பு பலகை வைக்க வேண்டும்.

4. இதர கடைகளுக்கு வசூலிக்கப்படுவது போன்று மின் கட்டணம் வசூலிக்கப்படும் பிரதி மாதம் 5-ம் தேதிக்குள் மின் கட்டணம் செலுத்த வேண்டும். தவறினால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் மற்றும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் காணும் பொது ஏல நிபன்தனைகளின்படியும் செயல்பட வேண்டும்.

## 7. இளநீர் விற்பனை செய்யும் உரிமம்

1. இளநீர் விற்பனையில் சேரும் கூந்தல்களை உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டு சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
2. இந்த உரிமம் பெற்றவர் இளநீர் விற்பனை செய்யும் இடத்தில் மேற்கூரை அல்லது பக்க அடைப்பு செய்யக்கூடாது.
3. விலைப்பட்டியல் பக்தர்கள் பார்வைக்கு தெரியும்படி வைக்க வேண்டும்.

**இரா. கண்ணன் ஆதித்தன்., M.S.(USA)**
**தக்கார்**

**சி.கல்யாணி, எம்.எல்.,**
**இணை ஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)**

**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.**

**பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி**

**பொது நிபந்தனைகள்:**

1. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதிகளின்படி நடத்தப்படும். இந்த விதிகளின்படி பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறநிலையத்துறை ஆணையர் ரத்தாணைக்கும், அங்கீகாரத்திற்கும் உட்பட்டதாகும்.
2. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்பவர்கள் அறிவிப்பில் கண்டுள்ளபடி காப்புத்தொகை மற்றும் ஏல வைப்புத்தொகை தனித்தனியாக செலுத்தி கலந்து கொள்ள வேண்டும். காப்புத்தொகை செலுத்தாதவர்கள் கண்டிப்பாக பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். ஏலம் ஜாரியாகாதவர்கள் டெபாசிட் தொகை மற்றும் காப்புத் தொகையை ஏலம் முடிந்தவுடன் வழங்கப்படும்.
3. ஒவ்வொரு இனம் பொது ஏலத்தின்போது அந்த ஏலத்தில் டெப்பாசிட் தொகை செலுத்தியவர்கள் மட்டுமே ஏலம் நடக்கும் இடத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.
4. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உரிமம் உறுதி பெற்றவர் பொது ஏல/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை முடிந்தவுடன் **உரிமத்தொகை மற்றும் வருமானவரி முழுவதையும் உடனடியாக செலுத்த வேண்டும்.** தவறினால் உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதில் திருக்கோயிலுக்கு தொகை இழப்பு ஏற்படின் முந்திய நபரிடம் ஈடு செய்யப்படும்.
5. ஏலம் உயர்ந்த கேள்வியுடன் நிறுத்திக் கொண்டு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும். ஏலம், ஒப்பந்தப்புள்ளி இவை இரண்டில் எது கூடுதல் தொகையோ அதுவே உறுதி செய்யப்படும்.
6. உரிமக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக காரணம் எதுவும் சொல்லாமல் நிபந்தனைகளை கூட்டவும் குறைக்கவும் அல்லது மாறுதல் செய்யவும் திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
7. காரணம் கூறாமல் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையை நிறுத்தி வைக்கவோ அல்லது ஒத்திவைக்கவோ இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உரிமை உண்டு. பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்தபின் உயர்ந்த தொகைக்கு கேட்டவர் அன்றே உரிமத்தொகையினை செலுத்த வேண்டும். உரிமம் உறுதி பெற்றவர்கள் பதிவேட்டில் தன் முழு விலாசத்தையும் எழுதி கையெழுத்து செய்ய வேண்டும். உறுதி செய்யப்பட்ட ஏலதாரர் / ஒப்பந்தப்புள்ளிதாரர் செலுத்தியிருக்கும் காப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் கிடையாது.
8. உரிமம் உறுதி பெற்ற நபர் வைப்புத் தொகை உட்பட தண்ணீர் மற்றும் மின் காப்புத்தொகையினையும் உடன் செலுத்த வேண்டும்.
9. உரிமம் உறுதி பெற்றவர் திருக்கோயிலில் இருந்து கொடுக்கும் மாதிரிப்படி ரூ.20/-மதிப்புள்ள முத்திரைக் காகிதத்தில் உரிமம் உறுதி பெறறே அதே தேதியில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும். ஒப்பந்த பத்திரம் எழுதிக் கொடுக்காவிடில் சம்பந்தப்பட்ட உரிமம் அனுபவிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். தேவையெனில் தமது பொறுப்பில் பதிவு செய்து கொடுக்க வேண்டும்.
10. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்ள வந்தவர்கள் நியாயமான தொகைக்கு ஏலம் கேட்கவில்லை என்று திருக்கோயில் நிர்வாகம் கருதினால் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கோயில் நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க யாருக்கும் உரிமை கிடையாது.
11. உரிமம் பெற்றவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அவ்வுரிமையை மாற்றம் (டிரான்ஸ்பர்) செய்யவோ அல்லது பினாமியாக நடத்தவோ உரிமை கிடையாது. மேலும் தன் விருப்பப்படி உரிமத்திலிருந்து விடுபடவும் உரிமை இல்லை.
12. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் முழு விவரங்களும் நிபந்தனைகளும் தெரிந்தே கலந்து கொண்டதாகவே கருதப்படுவார்கள். நடவடிக்கை முடிவு செய்த பின்பு கூறும் எவ்வித ஆலோசனைகளையும் ஆட்சேபனைகளையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

13. உரிமம் இனங்களுக்கு விற்பனை வரி மற்றும் வருமானவரி நடைமுறை விதிகளின்படி ஏலத்தொகைக்கு கணக்கிட்டு திருக்கோயிலில் செலுத்த வேண்டும். 79(C) நடவடிக்கை உரிமதாரர் பெயரில் உள்ள ஏல உரிமத்தொகைக்கு ஈடான சொத்து விபரங்கள்.
14. குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே உரிமம் விடப்படுவதால் உரிமம் காலம் முடிவடைந்தபின் யாதொரு பின் தொடர்ச்சியும் பாத்தியதையும் கிடையாது. மேலும் உரிம காலம் முடிவடைந்தபின் உரிமம் சொத்து தாமாகவே திருக்கோயில் சுவாதீனத்திற்கு வந்துவிடும்.
15. மேற்படி உரிமம் இனங்கள் வகைக்கு இத்திருக்கோயிலிருந்து கொடுக்கப்படும் மின்சாரம், தண்ணீர், ஆகியவற்றிற்குரிய கட்டணங்களை ஒவ்வொரு மாதமும் முறையே 5-ம் தேதிக்குள் முன்பாக செலுத்த வேண்டும். அவ்விதம் செலுத்தத் தவறினால் அபராதத் தொகையாக ரூ.40/- செலுத்த வேண்டும். மாத இறுதிக்குள் செலுத்தத் தவறினால் தண்ணீர், மின்சாரம் இணைப்பு துண்டிக்கப்படும். மறுமுறை இணைப்பு கொடுக்க ஆகும் செலவு தொகையுடன் கூடுதல் அபராதத் தொகையும் சேர்த்து செலுத்த வேண்டும். மின்சாரம் தடைப்படும் போதும் அல்லது மின்வெட்டு காலங்களில் உரிமதாரர்கள் தமது சொந்தப் பொறுப்பில் மாற்று ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும்.
16. திருக்கோயில் வளாகத்தில் உரிமம் பெற்று கடை/வியாபாரம் நடத்துபவர்கள் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட நெகிழி பொருட்களை பயன்படுத்தக் கூடாது. நெகிழி பொருட்கள் பயன்படுத்துவதாக தெரிய வந்தால் நெகிழி பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் உரிமம் இரத்து செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
17. திருக்கோயிலில் இருந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விகிதங்களை பொது மக்களுக்கும், பக்தர்களுக்கும் நன்கு தெரியும் விகிதத்தில் உரிமதாரர் தம் சொந்தப் பொறுப்பில் பெரிய எழுத்தில் **அறிவிப்பு பலகை எழுதி வைக்கவும்,** தவறினால் திருக்கோயில் நிர்வாகத்தால் இதற்கான அறிவிப்பு பலகை எழுதி வைக்கப்பட்டு அதற்கான செலவுத்தொகை உரிமதாரரிடமிருந்து வசூலிக்கப்படும். உரிமம் பெற்றவர் நடத்தும் கட்டண வசூல் இத்திருக்கோயிலில் நடத்துவது போன்ற எண்ணம் பொது மக்களிடையே உண்டாகும்படி திருக்கோயில் பெயரில் விளம்பரப் பலகை வைக்கக்கூடாது. **உரிமதாரர் பெயரில்** மட்டும்தான் விளம்பரப் பலகைகள் எழுதி வைக்க வேண்டும். (தேவஸ்தான கடை என குறிப்பிடக்கூடாது.)
18. மேலும், திருக்கோயில் மூலம், பொது மக்கள் பார்வைக்கு நன்றாக தெரியும் வண்ணம், பெயிண்டால் எழுதி வைக்கப்பட்டுள்ள, கட்டண விபரங்கள் அடங்கிய அறிவிப்பு பலகைகள் மற்றும் எச்சரிக்கை பலகைகள் மீது நோட்டீஸோ, தட்டிகளோ, துணி விரிப்பு போன்றவைகளையோ பயன்படுத்தி மறைக்க கூடாது. தேவையற்ற இதர தேவைகளுக்கான விளம்பரம் / அறிவிப்பு பலகைகள் வைக்கக்கூடாது.
19. போட்டியின் காரணமாக உரிமத்தொகையை உயர்த்தி கேட்டதற்காக திருக்கோயிலிலிருந்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விகிதங்களை விட யாரிடமிருந்து எந்த சந்தர்ப்பத்திலும் கண்டிப்பாக நிர்பந்தப்படுத்தி கூடுதலாக கட்டணம் வசூல் செய்யக்கூடாது. அவ்வாறு வசூலித்தால் மறு அறிவிப்பின்றி உரிமம் ரத்து செய்யப்படும்.
20. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்து கொள்பவர்கள் தொற்றுநோய் உள்ளவர்களாக இருக்கக் கூடாது. Covid 19 தொற்றுநோய் பரவலை தடுப்பதற்கு அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் வழிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.
21. உரிமம் பெறுவர் இந்து சமயத்தவராக இருக்க வேண்டும்.
22. திருக்கோயில் நலனுக்கு எதிராகச் செயல்பட்டவர்களும், செயல்படுவதாகக் கருதப்படுவர்களும் முன்பாக்கி வைத்திருப்பவர்களும், திருக்கோயில் பாக்கிக்காக தீர்ப்பு, கடனாளி என்று அறிவிக்கப்பட்டவரும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
23. போட்டியின் காரணமாக உயர்ந்த தொகை கேட்டதற்காக சாமான்களின் எடை மற்றும் தரத்தை குறைக்கக் கூடாது. மேலும் **விலையையும் உயர்த்தக்கூடாது.** அவ்வாறு **புகார்கள் வருமானால் உரிமம் ரத்து செய்யப்பட்டு** "இனம் மறு பொது ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி மூலம் விடப்படும். அதில் திருக்கோயிலுக்கு தொகை இழப்பு ஏற்படின் முந்திய நபரிடம் ஈடு செய்யப்படும்.
24. உரிமம் பெற்றவர்களுக்கு இராஜீயம் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஆகியவற்றால் ஏற்படும் இழப்புகளுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பு ஏற்க இயலாது.

25. பினாமி பெயரால் உரிமம் கேட்பதாக தெரியவந்தாலோ, முன்பாக்கி உள்ளவர்கள் உறவினர் பெயரால் உரிமம் கேட்க முன்வந்தாலோ "நபர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை முடிவு செய்தபின்பு முன்பாக்கி உள்ளவர்கள் கலந்துகொண்டதாக தெரிந்தால் உரிமம் இரத்து செய்யப்படும்.
26. இத்திருக்கோயில் உரிமம் மற்றும் விற்பனை உரிமம் பெற்றுள்ள இனங்களுக்கு உரிமம் தொகை நீங்கலாக அவ்வினங்களுக்கு **ஒதுக்கீடு செய்யப்படும் கட்டிடம் முதலானவற்றிற்கு திருக்கோயிலிருந்து நிர்ணயம் செய்யப்படும் வாடகைத் தொகையும் உரிமம் உறுதி பெற்றவர் செலுத்த வேண்டும்.** நிபந்தனைகளின்படி நடக்க தவறும் உரிமதாரரின் உரிமங்கள் இரத்து செய்யப்பட்டு அதில் திருக்கோயிலுக்கு தொகை இழப்பு ஏற்படின் முந்திய நபரிடம் ஈடு செய்யப்படும்.
27. உரிமம் பெற்றவர்கள் தனக்கு வழங்கப்பட்ட **உரிமம் பொருட்களை தவிர இதர உரிமம் பெற்றவர்களின் உரிமப் பொருட்களை கண்டிப்பாக விற்பனை செய்யப்படக்கூடாது.** அப்படி விற்பனை செய்தால் அவர்களது உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்புத்தொகை திருக்கோயிலுக்கு பறிமுதல் செய்யப்பட்டு அதில் திருக்கோயிலுக்கு தொகை இழப்பு ஏற்படின் முந்திய நபரிடம் ஈடு செய்யப்படும். மறு ஏலத்தில் ஆதாயம் ஏற்பட்டால் அதன் மீது முதல் உரிமதாரருக்கு எவ்வித உரிமையும் கிடையாது.
28. திருக்கோயில் நலன் கருதி உரிமம் பெற்றவர்களுக்கு தற்போது ஏலம் விட்ட இடத்திற்கு பதிலாக வேறு மாற்று இடம் கொடுக்க நிர்வாகத்தவர்களுக்கு உரிமை உண்டு. இதை ஆட்சேபிக்க உரிமம் பெற்றவர்களுக்கோ அல்லது வேறு யாருக்கும் உரிமை கிடையாது.
29. உரிமதாரர் உரிம காலத்தில் நிபந்தனைகளை செயல்படுத்தமுடியாது போனால் மேற்படியாளர் வாரிசுகளோ அல்லது நிர்வாகிகளோ நிபந்தனைகளை நிறைவேற்ற கடைமைப்பட்டவராவார்.
30. உரிமதாரர் தானாக முன்வந்து உரிமத்தினை ஒப்படைப்பு செய்ய நேர்ந்தால் முன்வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. மேலும் மறு ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்படும். மறு ஏலத்தில் நஷ்டம் ஏற்பட்டால் உரிமதாரரே இதற்கு பொறுப்பு ஆவார்.
31. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியின் போது சமர்பிக்கப்படும் வங்கி வரைவோலைகள், வங்கி காசோலைகள் போன்றவைகளை திருக்கோயிலுக்கு காசாக்குவதில் வங்கி கழிவு ஏதும் ஏற்பட்டால் மேற்படி வங்கிக் கழிவு மூலம் உறுதி பெற்றவரே பொறுப்பு ஆவார்.
32. ஏல வைப்புத்தொகை செலுத்தாதவர்கள், இத்திருக்கோயிலுக்கு எந்த வகையிலும் பாக்கி உள்ளவர்கள், பாக்கியுள்ளவர்களுக்காக வேறு நபர்கள் பெயரால் அல்லது அவரது உறவினர் பெயரால் (தாய், தந்தை, மனைவி, மக்கள், சகோதரர்கள் மற்றும் பந்துக்கள்) கலந்து கொள்பவர்கள், கோயில் நன்மைக்கு புறம்பான செயல்களில் ஈடுபடுபவர்கள், கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள், வழக்கு தொடரப்பட்டவர்கள், 18 வயது பூர்த்தியாகாதவர்கள், ஆகியவர்களை ஒப்பந்தப்புள்ளி ஏல நடவடிக்கைகளின்போது கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது. ஏல நடவடிக்கைகள் முடிவு செய்தபின்பு மேற்கண்ட நபர்கள் கலந்து கொண்டதாக தெரியவந்தால் மேற்படி உரிமம் ரத்து செய்யப்படும்.
33. திருக்கோயில் அபிவிருத்தியை கருதி கட்டிடங்களில் மாறுதல் அபிவிருத்தி பணிகள் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டால் உரிமம் காலத்தை இரத்து செய்து கட்டிடத்தை திரும்ப எடுத்துக்கொள்ள திருக்கோயிலுக்கு அதிகாரம் உண்டு. இதில் உரிமதாரர் ஏதும் நஷ்டஈடு கோர உரிமை இல்லை.
34. உரிமதாரர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திருக்கோயில் கட்டிடங்களுக்கு திருக்கோயில் அனுமதியின்றி எவ்வித மாற்றங்களோ அல்லது மராமத்து வேலைகளோ செய்யக்கூடாது.
35. உரிமதாரர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள பொருட்களுக்கு தீ விபத்து மற்றும் இதர இயற்கை பாதிப்பிலிருந்து தமது சொந்த பொறுப்பிலேயே காப்பீடு செய்திருக்க வேண்டும். அப்படி காப்பீடு செய்யாத பட்சத்தில் திருக்கோயிலிலிருந்து எவ்வித நஷ்டஈடும் கோரக்கூடாது. வழங்கப்படமாட்டாது. கடைகள் மற்றும் இதர கட்டிடங்களில் எளிதில் தீப்பற்றக்கூடிய கூரைகள் அமைத்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படும். ரத்து செய்யப்பட்டு மீண்டும் அந்த இனம் பொது ஏலத்தில் விடப்படும். அதில் திருக்கோயிலுக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் அதற்கு முன் ஏலதாரரே பொறுப்பு ஏற்கவேண்டும்.

36. உரிமதாரர்கள் மேற்படி நிபந்தனை இத்திருக்கோயிலில் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் இதர நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவேண்டும்.
37. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் உரிமம் உறுதியாகாதவர்களின் முன்வைப்புத்தொகை ஒப்பந்தப்புள்ளி/ஏல நடவடிக்கை முடிந்தவுடன் திரும்ப கொடுக்கப்படும்.
38. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் செலுத்தப்படும் காப்பு தொகை ஏலம் உறுதி பெற்றவருக்கு உரிமகாலம் முடிந்த பிறகு திரும்ப கொடுக்கப்படும். இதற்கு திருக்கோயிலில் இருந்து வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.
39. கட்டணம் வசூலிக்கும் இனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமைதாரர், நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில், நுகர்வோர் பாதுகாப்பு வழக்காடு மன்றம் ஆகியவற்றிற்கு புகார் ஏற்படும் வகையிலும் பாதிக்கப்படுபவர்களால் தொடரப்படும் மேற்படி வழக்காடு மன்ற தீர்ப்பிற்கு இத்திருக்கோயில் நிர்வாகம் எவ்வித பொறுப்பும் ஆகாது. மேற்கண்ட அனைத்திற்கும் உரிமக்காரர்கள் தான் பொறுப்பாவார்கள்.
40. உரிமம் வழங்கப்படும் கடைகளில் தடை செய்யப்பட்ட பொருட்கள் எவையும் வணிகத்திற்கு உபயோகப்படுத்தக்கூடாது.
41. இதர நிபந்தனைகள் ஏதும் இருந்தால் அது ஏலத்தின் போது அறிவிக்கப்படும்.
42. உரிமம் இனத்திற்கான நிபந்தனைகள் அனைத்தும் இந்திய சொத்துரிமை மாற்று சட்டத்தின் உரிமம் என்ற அத்தியாயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மட்டுமே பொருந்தும் மற்றும் கட்டுப்படுத்தும் அதன்படி ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு, ஒப்பந்தப்புள்ளி திறப்பதற்கு முன்னர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் இறந்து விட்டால், அவர் சார்பில் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை பரிசீலிக்க கோரவோ, ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொள்ளவோ இறந்து போன ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவரின் இறங்குரிமையினருக்கு (Legal heirs) உரிமை இல்லை. இந்த உரிமம் ஜாரி செய்யப்பட்டவர் உரிமகாலத்தில் இறந்து போனாலும் உரிமம் தானாகவே ரத்து ஆகிவிடும்.

**இரா. கண்ணன் ஆதித்தன்., M.S.(USA)**
**தக்கார்**

**சி.கல்யாணி, எம்.எல்.,**
**இணை ஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)**